NEHRU BAL PUSTAKALAYA

# ரோகந்தாவும் நந்திரியாவும்

கிருஷ்ண சைதன்யா





நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

நேரு பால புத்தகாலயம்

# ரோகந்தாவும் நந்திரியாவும்

கிருஷ்ண சைதன்யர

தமிழாக்கம்: அழ. வள்ளியப்பா

ஓவியம்: பிரணப் சக்ரவர்த்தி





முதற் பதிப்பு 1972 (1894)
இரண்டாம் பதிப்பு 1989 (1911)
© கிருஷ்ணா சைதன்யா, 1971
Rohanta & Nandriya (*Tamil*)
ரூ. 6.00

வெளியிட்டவர் : டைரெக்டர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, A-5 கிரீன் பார்க், புது டெல்லி-110016.

புத்தரைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். உலகத்தி லுள்ள கோடிக்கணக்கான மக்கள் அவரை அன்பின் வடிவ மாகவும், சிறந்த ஞானகுருவாகவும் போற்றி வருகிறார்கள்.

புத்தர் என்பது ஒரு பெயரல்ல; அந்தச் சொல்லுக்கு 'ஒளி பெற்றவர்' என்று பொருள். அதாவது, வாழ்வு என் றால் என்ன என்பதை உணர்ந்தவர்; மனிதர்கள் எப்படி வாழ்ந்தால் அமைதியும் ஆனந்தமும் அடையமுடியும் என்று ஆழ்ந்து சிந்திப்பவர். புத்தரின் முதல் பெயர் சித்தார்த்தர். அவர் 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஓர் இளவரசர்.

ஒரு நாள், நள்ளிரவில், அவர் அரண்மனையை விட்டுப் புறப்பட்டார். நாடெங்கும் பல ஆண்டுகள் அலைந்தார். ஏன்? வீட்டின் மீது அவருக்கு வெறுப்பா? அல்லது பெற்றோர், மனைவி, குழந்தையின் மீது வெறுப்பா? இல்லை. தம்மைச்



சுற்றிலும் சோகமும் துயரமும் இருப்பதை அவர் கண்டார். அவற்றை நீக்க வழி காணவேண்டும் என்று துடித்தார்.

பொழுது புலர்ந்ததும், பூக்கள் மலர்கின்றன. அவற்றின் மீதுள்ள பனித்துளிகள் சூரிய ஒளியில் வைரக் கற்களைப்போல் மின்னுகின்றன. ஆனால், மாலை வந்ததும், பூக்கள் வாடி விடுகின்றன. இளவேனிலில் மரங்கள் துளிர்க்கின்றன. கோடையும் குளிரும் வந்ததும் இலைகள் உதிர்ந்து மரங்கள் மொட்டையாகி நிற்கின்றன. மறுபடியும் துளிர்க்கின்றன. குழந்தைகள் இளைஞர்களாக வளர்கிறார்கள். அப்போது வாழ்க்கையானது செயல் நிறைந்த மகிழ்ச்சியோடு இருக்கிறது. ஆனாலும் முதுமைப் பருவத்தைத் தடுக்க முடிகிறதா? எல்லாரும் மடிகிறார்கள். எல்லா உயிர்களுமே மறைகின்றன.

இதுவே உலக இயற்கை போலிருக்கிறது. ஆகையால், கவலைப்பட்டு என்ன பயன்? ஆனாலும், நாம் மகிழ்ச்சியோடு இருக்க முயன்று பார்க்கலாம் அல்லவா? மன நிறைவோடும், ஒருவரோடு ஒருவர் அன்போடும் வாழலாம் அல்லவா? ஆனால், மக்கள் இப்படி இருப்பதாகத் தெரியவில்லையே! உலகில் எத்தனை துன்பங்கள்! எத்தனை துயரங்கள்! இவையெல்லாம் எதனால்? காரணமில்லாமல், அல்லது அற்ப காரணங்களுக்காக மக்கள் ஒருவரை ஒருவர் வெறுப்பதனால்தான். சுய நலத்தை இயன்றவரை குறைத்துக்கொண்டு ஒருவரோடு ஒருவர் நன்கு பழகினால், உலகமே இன்பமயமாக இருக்கும்.

மக்கள் தன்னலம் இல்லாமலும், அன்பு காட்டியும் வாழ வழிகாண விரும்பினார் சித்தார்த்தர். ஆனால், அரண்மனையில் வசதிகளுடன் வாழ்ந்துகொண்டே வழி காண முடியுமா?

சித்தார்த்தர் நள்ளிரவில் அரண்மனையை விட்டுப் புறப்பட்டபோது, அவரது மனைவியும், சின்னஞ்சிறு குழந்தையும் மல்லிகையும் மற்ற மலர்களும் பரப்பிய படுக்கையில் தூங்கிச்



கொண்டிருந்தார்கள். அவர்களை அவர் திரும்பித் திரும்பிப் பார்த்தார். சிறு குழந்தையை விட்டுப் பிரிவது அவருக்கு வருத்தமாக இருந்தது. தம் கையில் குழந்தையை எடுத்துக் கொண்டால்தான், அந்த இடத்தை விட்டு நகரமுடியும் என்று அவருக்குத் தோன்றியது. ஆனால், தூங்கும்போது கூட, குழந்தையை அதனுடைய தாய் தன் கையால் அணைத்துக் கொண்டிருந்தாள். ''இளவரசியின் கையை நகர்த்தினால், அவள் விழித்துக்கொள்வாள். அபபுறம் நான வெளியேற முடியாது. என் அலைச்சல் முடிந்து, மக்களின் துயரம் தீர வழி கண்ட பிறகே நான் திரும்பிவந்து என் மகனைப் பார்ப்பேன்'' என்று தீர்மானித்தார்.

இங்குமங்கும் அலைவதிலும் தியானத்திலும் பல ஆண்டுகள் கழிந்தன. ஒருநாள் அவருக்குத் தோன்றியது: ''அடடே, அன்று இரவு நான் வீட்டைவிட்டுப் புறப்படும்போதே மக்கள் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கு என்ன வழி என்பதைக் கண்டேனே! தூக்கத்திலும் தாய் தன் குழந்தையைக் கையால் அணைத்துப் பாதுகாத்தாளே, அந்தக் காட்சியைக் கண்டபோது அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. தாய் தன் குழந்தையைப் பாதுகாப்பதுபோல், ஒவ்வொருவரும் தாயுள்ளத்துடன் எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்திப் பாதுகாக்கவேண்டும் என்ற உண்மையை



அப்போது உணரவில்லை. இப்போது உணர்கிறேன்" என்றார்.

குழந்தையிடம் தாய் அன்பு செலுத்துவதுபோல், ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பு செலுத்திவந்தால், உலகமே இன்பமயமாகி விடும். புத்தர் என்ற இந்த மகாஞானி எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டினார். அவர் மறைந்ததும், மக்கள் அவரது பெருங்கருணையை எண்ணி வியந்தனர்.

எல்லா மதங்களிலும் பொதுவாக ஒரு நம்பிக்கை உண்டு. அது உங்களுக்குத் தெரிந்திருக்கும். நல்லது செய்வோர் சொர்க்கத்தை அடைந்து என்றென்றும் அங்கே சுகமாக வாழ்வார்கள் என்பதுதான் அது. ஆனால், புத்தரைப் பற்றிய வரலாறு வேறு விதமாக இருக்கிறது. அவர், சொர்க்கத்திற்குப் போவதை விரும்பவில்லையாம். உயிரினங்கள் — அதாவது மக்களும் மிருகங்களும் — எத்தனை எத்தனையோ பிறவிகள் எடுக்கிறார்கள். ஒவ்வொரு பிறவியிலும், அவர்கள் துன்பப் படும்போது அவர்களுக்கு உதவவேண்டும் என்று அவர் விரும்பினாராம். அதனால் அவரும் திரும்பத் திரும்ப இந்தப் பூமியிலே பல பிறவிகள் எடுத்தாராம். இளவரசர் சித்தார்த்தராகப் பிறப்பதற்கு முன்பே, அவர் பல பிறவிகள் எடுத்திருந்தாராம். வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு இடங்களில் அவர் மிருகமாகவோ அல்லது மனிதனாகவோ பிறந்து, பிறருடைய துன்பங்களை எப்படித் துடைத்தார் என்று பல கதைகள் கூறுகின்றன. இவ்வாறு கூறும் ஒவ்வொரு கதையையும் ஒரு ஜாதகம் (பிறவி) என்பார்கள். இந்தக் கதைகள் எல்லாவற்றையும் பாலி மொழியில் எழுதிவைத்தார்கள்.

இப்படி 500க்கு மேற்பட்ட கதைகள் பாலிமொழியில் உள்ளன. எல்லாமே அழகிய கதைகள். முதலில் அவற்றைப் பாலியிலிருந்து சம்ஸ்கிருதத்தில் விரிவாக மொழிபெயர்த்தார்கள். பிறகு, பண்டைய இந்தியச் சிற்பிகள் இக்கதைகளை சாஞ்சி, அமராவதி போன்ற பௌத்தத் தலங்களில் கல்லிலே செதுக்கிவைத்தார்கள். அதன்பிறகு, ஓவியர்கள் அவற்றை வண்ண ஓவியங்களாகத் தீட்டினார்கள். இந்தக் கதைகளில் பல அஜந்தாக் குகைகளில் சித்திரிக்கப் பெற்றுள்ளன.

இங்கே இரண்டு கதைகளைத் தருகிறோம். ரோகந்தா என்பது ஒரு கறுப்புக்கலைமான். நந்திரியா என்பது ஒரு குரங்கு. அவற்றின் அன்பையும் தியாகத்தையும் படிக்கும்போது, அவை கருணை வடிவான புத்தரின் மறுபிறவிகளே என்பதையும், உலகிலே ஆனந்தமும் அன்பும் பெருகவே அவர் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்தார் என்பதையும் நன்கு உணருவீர்கள்.

## கறுப்புக் கலைமான் ரோகந்தா

வெகு காலத்திற்கு முன்பு, உத்தரப் பிரதேசக் காட்டின் அருகே யிருந்த ஒரு சமவெளியில், ஒரு மான்குட்டி பிறந்தது. அதன் பெயர் ரோகந்தா.

கறுப்பு மானை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? துள்ளி ஓடும் மான் இனத்திலேயே அதுதான் மிகவும் அழகானது. இயற்கைச் சூழலில் இந்தியாவில் மட்டுமே இந்த இனம் அதிகமாக வாழ்கின்றது. நன்கு வளர்ந்த ஆண் மானின் முதுகு பட்டுப் போன்று கரிய நிறத்தில் இருக்கும். அடிப்புறம் வெண்மையாக இருக்கும். நெற்றியிலிருந்து சுருண்டு எழும்பும் கொம்புகள் அதற்கு அழகு சேர்க்கும். பெண்மான் சற்றே சிறியதாயிருக்கும். அதற்குக் கொம்புகள் இல்லாவிட்டாலும், ஒரு தனி அழகு உண்டு. அதன் நிறம் வெளிர் மஞ்சள்.

ரோகந்தாவும் பிறக்கும்போது வெளிர்மஞ்சளாகத்தான் இருந்தது. ஆனால், அதற்கு மூன்று வயதானதும், அதன் மேனி அழகிய கருநிறமாக மாறத் தொடங்கியது. அப்போது அதன் பெற்றோருக்கு ஒரே மகிழ்ச்சி. இனி அது தன்னைத் தானே கவனித்துக்கொள்ளமுடியும் என்பதையே அந்த மாற்றம் உணர்த்தியது.



சுமார் 100 மான்கள் கொண்ட கூட்டத்தில் ரோகந்தா அதன் பெற்ருேருடன் வாழ்ந்து வந்தது. ஒவ்வோர் ஆண்டும் வயதான சில மான்கள் இறந்துபோகும். ஆனுலும், புதிதாகக் குட்டிகள் பிறந்து அவற்றை ஈடுசெய்துவிடும்.

தாய்மான் ஒரு சமயத்தில் ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் போடும். அந்தக் குட்டிகளே அடர்ந்து உயர்ந்த புல்-புதரில் மறைத்துவைத்துப் பாதுகாக்கும். விரைவிலே அவை பலம் பெறும். பிறகு கூட்டத்துடன் சேர்ந்துகொள்ளும்.

ரோகந்தா புத்திசாலியாக வளர்ந்தது. மான் கூட்டத்துப் பழக்கவழக்கங்களில் தேர்ச்சிபெற்றது. மான்கூட்டத்தின் முக்கிய உணவு புல். காட்டின் எல்லேயில் யாராவது பயிரிட்டிருந்தால், மான்கள் சில சமயங்களில் அங்கு செல்லும். வயல்களில் இறங்கித் தானியக் கதிர்களேத் தின்னும். காட்டின் இடையே அடர்ந்து வளர்நத புல் வெளிகளில் அவை மேய்ந்து கொண்டிருக்கும். நடுப்பகல் வரை நன்ருக மேயும். உச்சி வெய்யிலில் படுத்து ஓய்வெடுக்கும். பிறகு மாலேயில் மறுபடியும் மேயும். அப்போது ஏதேனும் ஆபத்து வந்தால், நீண்டு வளர்ந்த புல்புதர்களின் இடையே ஒளிந்துகொள்ளும்.

கூர்ந்து கேட்கும் சக்தியோ அல்லது நுட்பமாக நுகரும் சக்தியோ மானுக்கு இல்லே. ஆனுலும், கூர்மையான பார்வை உண்டு. துரிதமாக ஓடக் கால்கள் உண்டு. இவையே அதற்கு ஆபத்துக்கு உதவக் கூடியவை.

கறுப்புமான் மணிக்கு 65 கிலோ மீட்டர் வேகத்தில்



நெடுந்தூரம் பாய்ந்து ஓடும். உலகிலேயே வேகமாக ஓடும மிருகங்களில் இதுவும் ஒன்று. முதலில், உயர் எழும்பி எழும்பிச் செங்குத்தாகக் குதிக்கும். பிறகு, சில மீட்டர் தூரம் தாவித் தாவி ஓடும். அப்புறம் நாலு கால் பாய்ச்சல்தான்! மான் கூட்டம் விரைந்து ஓடும்போது பார்க்கவேண்டுமே. அப்படியே ஆகாயத்தில் பறப்பது போல இருக்கும் அந்த அழகான காட்சி!

சிறுவயதிலேயே ரோகந்தா எவ்வளவு புத்திசாலியாக இருந்தது தெரியுமா? ஒரு நிகழ்ச்சியைக் கேளுங்கள். காட்டிலுள்ள மாமரங்களில், சில காலங்களில் ஏராளமாகப் பழங்கள் பழுத்திருக்கும். அப்போது பறவைகள் கொத்தித் தள்ளிய பழங்கள் மரத்தடியில் சிதறிக் கிடக்கும். சில மரங் களில் கிளைகள் தாழ்வாக இருக்கும். அவற்றிலுள்ள பழங்களை மான்கள் பின்கால்களை ஊன்றி நின்றபடி எம்பி எம்பிக் கடித்துச் சுவைக்கும்.





அந்தக் காட்டுக்கு ஒரு வேடன் அடிக்கடி வருவான். மரத்தின் அருகே மானின் அடிச்சுவடு தெரிந்தால் போதும், உடனே அவன் மரத்தின்மீது பரண் அமைப்பான். வெளியே தெரியாமல் இலை தழைகளால் மூடி மறைத்தபடி பரணில் காத்திருப்பான். ஏதேனும் ஒரு மான் அருகிலே வந்தால், ஈட்டியை அதன் மேல் எறிந்து அதைக் கீழே வீழ்த்துவான். இப்படி அடித்துக் கொன்ற மிருகங்களின் மாமிசத்தையும் தோலையும் விற்று, அவன் பிழைப்பு நடத்தி வந்தான்.

ஒரு நாள் ரோகந்தா ஒரு மாமரத்தைக் கண்டது. அதில் தணிவாக இருந்த கிளைகளில் ஏராளமாகப் பழங்கள் இருந்தன. இளம் வயது மான் அல்லவா? ஆசை தீர, பசி தீர பல மாம் பழங்களைத் தின்றது. அடுத்த நாளும் அங்கே வரவேண்டும் என நினைத்துத் திரும்பியது.

சற்று நேரத்தில் அவ்வழியாக வேடன் வந்தான். புதிதாக ஒரு மான் வந்து போன அடையாளத்தைக் கண்டான். உடனே மரத்தின் மீது ஒரு பரண் கட்டிவிட்டு வீட்டுக்குப் போனான். மறு நாள் அதிகாலையில் மரத்திலே ஏறிப் பரணில் ஒளிந்துகொண்டான். கையிலே ஈட்டி தயாராக இருந்தது. நெடுநேரம் காத்திருந்தான். மான் வரவில்லை. திடீரென்று அவன் முகம் மலர்ந்தது. ஒரு சிறு மான் மரத்தை நோக்கி வருவதைக் கண்டான். அதுதான் ரோகந்தா.





மானின் காலடியை வேடன் கண்டுபிடித்தானே, அது போலவே வேடனின் காலடியையும் புத்திசாலியான மான் கண்டுபிடித்துவிட்டது. வேடன் எவ்வளவோ முன்ஜாக் கிரதையாக இருந்தும், ஓரிரு காலடிகளை மறைக்காமல் இருந்துவிட்டான். ரோகந்தா நிமிர்ந்து பார்த்தது. மரக்கிளை கள் முன்புபோல் இல்லை. ஏதோ மாறுபாடு தெரிந்தது. "சரி, அபாயம் காத்திருக்கிறது" என்று ரோகந்தா நினைத்தது. மரத்தை நெருங்காமல், சிறிது தூரம் தள்ளியே நின்றது.

வேடனுக்குப் பரபரப்பு. ரோகந்தா அருகே வரும்வரை காத்திருக்க அவனுக்குப் பொறுமை இல்லை. அது அசையா மல் நிற்கவே, அவன் ஒரு மாம்பழத்தைப் பறித்துத் தரையிலே எறிந்தான். அது கீழே விழுந்து மெல்ல மானை நோக்கி உருண்டு சென்றது. அதைப் பார்த்ததும், மேலும் பழங்களைத் தின்னவேண்டும் என்ற ஆசையில் மான் நெருங்கிவரும் என அவன் எதிர்பார்த்தான்.

மாம்பழம் உருண்டு வந்ததும், அதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது என்பதை மான் உணர்ந்துகொண்டது. மரக் கிளைகளை ஊடுருவிப் பார்த்தது. முதலில் ஒன்றும் புதிதாகத் தெரியவில்லை. ஆனால், நல்ல காலமாக, அப்போது இளங் காற்று வீசவே, கிளைகள் அசைந்தன. இலைகள் சலசலத்தன. சில விநாடிகளில் வேடனைப் பார்த்துவிட்டது ரோகந்தா.

வேடனைப் பார்த்ததாக ரோகந்தா காட்டிக்கொள்ள வில்லை. உரத்த குரலில் மரத்தைப் பார்த்து, "மாமரத் தண்ணே, நீ எனக்குப் பழம் தரவேண்டும் என்றால், இத்தனை நாளும் நேராகத் தரையில்தானே கொட்டுவாய்? ஆனால், இன்று மட்டும் கல்லை எறிவதுபோல் என்னை



நோக்கி எறிகிருயே, ஏன்? என்மேல் கோபம் போலிருக்கிறது. சரி, சரி, நான் போகிறேன். என்னை அன்போடு வரவேற்கும் வேறு ஒரு மரத்திற்குப் போகிறேன்'' என்றது.

தான் இருப்பதை அறிந்துவிட்டது மான், அதனுல்தான் இப்படிப் பரிகாசமாகப் பேசுகிறது என்பதை உணர்ந்தான் வேடன். எரிச்சலுடன் மானை நோக்கி ஈட்டியை எறிந்தான். ஆனுல் மான் சட்டென்று நகர்ந்துகொண்டது. ஈட்டி வெறும் தரையில் விழுந்தது. வேடனின் வயிற்றெரிச்சலை அதிகப்படுத்தும் வகையில், ரோகந்தா ஈட்டியை வாயில் கௌவிக்கொண்டு ஓடியே போயிற்று!

ரோகந்தாவுக்கு மற்ரேர் ஆபத்து வந்தது. ஆனுல், அதி லிருந்து இவ்வளவு எளிதாகத் தப்பவில்லை. காட்டிலே அது சுற்றிவந்தபோது, ஆதிவாசி ஒருவன் வைத்திருந்த கண்ணி ஒன்றில் அகப்பட்டுக் கொண்டது. ஒரு கணம் அது பெரும் பீதி அடைந்தது. மறுகணம், தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, 'தப்பிக்க வழி என்ன?' என்று அமைதியாகச் சிந் தித்தது. அதற்கு ஒரு யோசனை தோன்றியது. கண்ணியிலி ருந்து தப்பிக்கத் திமிறிஞல், முடிச்சு இன்னும் இறுக்கமாகும். பிறகு, மேலும் தொல்லைதான். ஆகவே, அது தரையைத் தன் கால்களால் பிருண்டியது. புல்லையும் மண்ணையும் சுற்றி லும் இறைத்தது. பிறகு, கீழே ஒரு பக்கமாகச் சாய்ந்து படுத்துக் கால்களை விரைப்பாக நீட்டியது. தலையைப் பக்க வாட்டிலே தொய்யவிட்டுக் கண்களை மூடிக்கொண்டது. நாக்கை வெளியே நீட்டித் தொங்கவிட்டது. அதன் உடலெல் லாம் நனைந்து ஈரமாகியது. உடனே, ஈக்கள் அதை மொய்க் கத் தொடங்கின. அசையாமல் கிடந்த அதன் உடல்மீது சில காகங்களும் வந்து உட்கார்ந்தன.

ரோகந்தா வெகுநேரம் அப்படியே கிடந்தது. பிற்பகலில் அந்த ஆதிவாசி வந்தான். தான் வைத்த கண்ணியில் ஏதா வது சிக்கியிருக்கிறதா என்று பார்த்தான். ஒரு மான் அகப் பட்டுக் கொண்டது என்பதைத் தூரத்திலிருந்தே பார்த்து மகிழ்ந்தான். ஆனல் அருகே வந்ததும், அவனுக்குச் சிறிது ஏமாற்றமாக இருந்தது. அசையாத உடல்மீது காகங்கள் இருப்பதையும், ஈக்கள் மொய்ப்பதையும் அவன் பார்த்தான். தரையிலே புல்லும் மண்ணும் சிதறிக் கிடப்பதும் தெரிந்தது.





“பாவம், இது அதிகாலையிலேயே சிக்கிக்கொண்டிருக்க வேண்டும். தப்புவதற்குப் படாத பாடு பட்டிருக்கிறது. கண்ணியிலுள்ள சுருக்கு கழுத்தை நன்ருக இறுக்கியதால் இறந்துபோய்விட்டது” என்று நினைத்தான். “இப்போதே இது அழுக ஆரம்பித்துவிட்டது. வீட்டுக்கு எடுத்துப் போவதற்குள் இன்னும் மோசமாகிவிடும். இதன் மாமிசத்தைத் தின்ன முடியாது. இங்கேயே இதை வெட்டித் துண்டமாக்கி, கொஞ்சத்தைத் தின்றுவிட்டு, மீதியை வீட்டுக்கு எடுத்துப் போகலாம்” என்ற எண்ணத்தில், சுருக்குகளை அவிழ்த்து, மானைத் தனியாக எடுத்தான். தரையிலே கிடத்தி விட்டு, தீ மூட்டுவதற்குச் சுள்ளி பொறுக்கச் சென்ருன். அவன் சிறிது தூரம் சென்ருனே இல்லையோ, ரோகந்தா திடீரென்று எழுந்தது. உடலை ஒரு குலுக்கு குலுக்கியது. அம்பைப்போல் பாய்ந்து, பறந்தோடிவிட்டது.

வளர வளர ரோகந்தாவுக்கு இத்தகைய அனுபவங்கள் நிறைய ஏற்பட்டன. வாழ்க்கை இனிமையாக இருந்தாலும், அதில் ஆபத்துக்களும் அதிகம் உண்டு என்பதை உணர்ந்தது. ஆபத்துக்களைத் தனியாகச் சமாளிப்பது கடினம். நண்பர்கள் இருந்தால், ஒருவருக்கு ஒருவர் உதவலாம் அல்லவா?

ரோகந்தா வாழ்ந்த சமவெளிக்குப் பக்கத்தில் ஒரு காடு இருந்தது. அங்கே உயரமான ஒரு மரத்தில் ஒரு மரங்கொத்தி கூடுகட்டி வசித்து வந்தது. அதன் அருகில் இருந்த சிறிய குட்டையில் ஓர் ஆமை வாழ்ந்தது. அந்தக் குட்டைக்குச் சிறிது தூரத்தில் ஓர் ஏரி இருந்தது.



தினமும் மாலையில் மான்கூட்டம் அந்த ஏரியில்தான் நீர் அருந்துவது வழக்கம். ஆனால், ரோகந்தா மட்டும் குட்டைக்கே வரும். ஆமையையும், மரங்கொத்தியையும் சந்தித்து அரட்டை அடிப்பதற்கு அதுதானே ஏற்ற இடம்? மூன்றும் நெருங்கிய நண்பர்களாகிவிட்டன.

ஒரு நாள், அவ்வழியாக ஒரு வேடன் சென்றான். அவன் குட்டையின் அருகே ஒரு மானின் காலடிச் சுவட்டைக் கண்டான். சில வாரங்களுக்கு முன்பு அவன் அந்தப் பக்கம் வந்தபோது எந்த ஒரு மிருகத்தின் காலடியையும் பார்க்கவில்லை. "ஓகோ! இப்போது இங்கே வழக்கமாக ஒரு மான் வருகிறது போலிருக்கிறது. அதைப் பிடிக்கலாம்" என்ற எண்ணத்தில் தோலால் ஆன ஒரு சுருக்கு வலையை அங்கே வைத்துவிட்டுச் சென்றான். அப்போது குட்டையில் அடிமட்டத்தில் இருந்த ஆமை இதைக் கவனிக்கவில்லை.

பொழுது சாயும் நேரத்தில், வழக்கம்போல் குட்டைக்குச் சென்ற ரோகந்தா வலையில் அகப்பட்டுக்கொண்டது. உடனே துடிதுடித்து அலறியது. அதன் அலறலைக் கேட்டதும், ஆமை கரையேறி வெளிவந்தது. மரங்கொத்தி கீழே பறந்துவந்து அருகே இருந்த ஒரு கல்லில் அமர்ந்தது.



மரங்கொத்தி ஆமையைப் பார்த்து, "அண்ணே, இந்தத் தோல் வலையிலுள்ள வார்கள் உறுதியானவை. அவற்றை விட மிகவும் உறுதியானவை உன்னுடைய பற்கள். ஆகையால் நீதான் இந்த வலையைக் கடித்து அறுக்கவேண்டும். தோல்வார்கள் உறுதியாக இருப்பதால், நீண்ட நேரம் ஆகலாம். ஒரு நாள்கூட ஆகலாம். இதற்குள் நான் போய், உன் வேலை முடியும் வரை வேடன் இங்கே வராதபடி பார்த்துக்கொள்கிறேன்" என்றது.

சிறிது தூரத்தில் காட்டின் ஓரத்தில் இருந்தது வேடனின் குடிசை. அங்கே பறந்துசென்றது, மரங்கொத்தி. குடிசையின் எதிரே இருந்த மரத்தில் இரவு முழுவதும் காத்துக்கொண்டிருந்தது. விடிந்ததோ இல்லையோ, வேடன் கையிலே ஒரு கத்தியுடன் வெளியில் வந்தான். மரங்கொத்தி அவனைப் பார்த்ததும், அவன் முகத்திற்கு எதிரே பயங்கரமாகக் கத்திக் கொண்டே பறந்தது. தன் சிறகால் அவனைத் தாக்கியது. அவன் மீது எச்சமிட்டு அசிங்கப்படுத்தியது. வேடனுக்குச் சகுனங்களில் நம்பிக்கை உண்டு. காலையில் வேலைக்குப் புறப்படும்போது பறவையின் எச்சம் உடம்பிலே பட்டதால் அது கெட்ட சகுனம் என்று நினைத்தான். ஆகையால், "காலையில் வேண்டாம். பகலில் போகலாம்" என்று வீட்டிலேயே இருந்துவிட்டான்.

பிற்பகல் வெகுநேரம் சென்ற பிறகு, மறுபடியும் வெளியே செல்ல நினைத்தான். சன்னல் வழியாக எட்டிப் பார்த்தான். மரங்கொத்தி அந்த இடத்தை விட்டுப் போகவே இல்லை. அதன் தொல்லையிலிருந்து தப்ப, கொல்லைப்புற வழியாகப் போகலாம் என்று வேடன் எண்ணினான். ஆனால், கெட்டிக்கார மரங்கொத்தியோ அவன் எண்ணத்தை ஊகித்து அறிந்து கொண்டது. ஆகையால், அவன் கொல்லைப்புறமாக வந்தானோ இல்லையோ, அது அவனை நோக்கிப் பறந்து சென்று, சிறகுகளால் அவன் முகத்தில் அறைந்து, அலகுகளால் கொத்தியது. மறுபடியும் அவன் மீது எச்சமிட்டது. இந்தத் தடவை வேடனுக்கு அபாரமான கோபம். அவன்



பறவையை அடிக்கப் பார்த்தான்; அதைப் பிடித்து அதன் கழுத்தை நெரிக்கவேண்டும் என்று துடித்தான். இப்போது வேடனுடன் சண்டைபோடுவது ஆபத்து என்பதை மரங்கொத்தி உணர்ந்தது. ஆகையால், அது பறந்து சென்று ஒரு மரத்திலே அமர்ந்தது. வேடன் என்ன செய்கிறான் என்று கவனித்தது. மிகவும் கோபமாயிருந்த வேடன், நல்ல சகுனமாயிருந்தாலும் சரி, கெட்ட சகுனமாயிருந்தாலும் சரி, குட்டையை நோக்கிச் செல்வது என்று முடிவுசெய்தான்.

ஆத்திரத்துடன் அவன் வேகமாக நடந்து செல்வதைக் கண்ட மரங்கொத்தி, "இனியும் இங்கு இருப்பதில் பயனில்லை. நம் நண்பர்களை எச்சரிக்கவேண்டும்" என்று எண்ணி மிக வேகமாகக் குட்டையை நோக்கிப் பறந்து சென்றது.

தோல் வலையின் வார்களை ஒவ்வொன்றாக அறுத்துக் கொண்டிருந்தது ஆமை. இன்னும் ஒரே ஒரு வார்தான் மீதம் இருந்தது. வார் உறுதியாக இருந்ததால் ஆமைக்கு வாய் வலித்தது. பற்கள் விழுந்துவிடுமோ என்ற அச்சம்கூட அதற்கு ஏற்பட்டது. வாய் முழுவதும் இரத்தமாகிவிட்டது.

மரங்கொத்தி பறந்து வந்து, வேடன் வருவதை அறிவித்ததும், ஆமை தன் பல்வலியையோ, வாய் வலியையோ பொருட்படுத்தவில்லை. மேலும் தீவிரமாக வாரைக் கடித்து இழுத்தது. கத்தியும் கையுமாக வேடன் ஓடிவருவதைக் கண்ட ரோகந்தா, தன் பலத்தையெல்லாம் காட்டித் திமிறியது. வேடன் பத்தடி தூரத்தில் வரும்போது வார் பட்டென்று



அறுந்தது. மான் துள்ளிக் குதித்துக் காட்டுக்குள் ஓடிவிட்டது. மரங்கொத்தி மரத்தின் உச்சிக்குப் பறந்தது. ஆனால், பாவம், சோர்ந்து போன ஆமை அகப்பட்டுக்கொண்டது.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற ஆத்திரத்தில் வேடன் ஆமையைப் பிடித்து ஒரு பைக்குள்ளே போட்டான். அந்தப் பையைத் தாழ்வான ஒரு மரக்கிளையில் கட்டினான். தப்பியோடிய ரோகந்தா திரும்பிப் பார்த்தபோது இந்த அநியாயத்தைக் கண்டது. உடனே அது சட்டென்று நின்றது. தன்னைக் காப்பாற்றஇரவு பகலாகப் பாடுபட்ட நண்பனை







ஆபத்திலிருந்து காப்பாற்றவேண்டாமா? திடீரென்று அதற்கு ஒரு யோசனை தோன்றியது. உடனே, காலில் அடிபட்டு நொண்டுவது போலப் பாசாங்கு செய்தது. மெல்ல மெல்ல நடந்தது. வேடன் இதைக் கவனித்தான். ''வலையில் மாட்டிக் கொண்டதால் மான் களைத்துப்போய் ஓடமுடியாமல் தவிக்கிறது'' என்று நினைத்தான். கையிலே கத்தியை எடுத்துக் கொண்டு அதைப் பிடிக்க ஓடினான். ரோகந்தா இதுவரை தடுமாறியதுபோல் நடந்தாலும் வேடனுக்கு அகப்படாதபடி இங்குமங்குமாக ஓடி, அவனைக் காட்டுக்குள் இழுத்துச் சென்று விட்டது. அவனை ஏமாற்றிவிட்டு, அவனுக்குத் தெரியாமல் வேறு ஒரு வழியாகக் குட்டைக்குத் திரும்பிவந்தது. தன் கொம்புகளால் ஆமை இருந்த பையை இழுத்துத் தரையில் போட்டது. பையைக் கிழித்து, ஆமையை விடுவித்தது. நன்றியுடன் ஆமை குட்டைக்குள் ஓடி மறைந்தது.



போனார்கள். காட்டைச் சுற்றி வளைத்து நின்றுகொண்டார்கள். மரங்கள் புதர்கள் மறைவிலிருந்த மான் கூட்டத்தைக் கலைத்தார்கள். அவை வெளியே வந்ததும், பறை அடித்தும் கூச்சலிட்டும் குழம்பி ஓடச்செய்தார்கள். எல்லாப் பக்கங்களிலும் மக்கள் துரத்தவே, மான்கள் வேறு வழி இன்றி, ஓடி ஓடி அரண்மனைப் பூங்காவில் நுழைந்தன. எல்லா மான்களும் வேலிக்குள் வந்து சேர்ந்ததும், நகர மக்கள் வேலிக் கதவை அடைத்து விட்டார்கள். பிறகு அரசனிடம் போய், ''இனி, தங்கள் விருப்பம்போல் நாள் முழுவதும்கூட வேட்டையாடலாம்'' என்று கூறினார்கள்.

பிடித்துவந்த மான்களில் இரண்டு கூட்டங்கள் இருந்தன. ஒரு கூட்டத்திற்குத் தலைவன் ரோகந்தா. மற்றொரு கூட்டத்திற்குத் தலைவன் ஹீரான். அதுவும் ஒரு சிறந்த மான்தான். ஆனாலும் ரோகந்தாவைப் போல் அது தன் இனத்தை அன்பினால் அடக்கி ஆளவில்லை; அதிகாரத்தால் அடக்கி ஆண்டது. அரசன், இந்த இரு தலைவர்களையும் கவனித்தான். தான் அறிந்த கலைமான்களிலேயே இவை மிகச் சிறந்தவை என்பதை உணர்ந்தான். 'இந்த இரு தலைவர்களுக்கும் யாரும் எவ்விதத் தீங்கும் இழைக்கக் கூடாது' என்று கட்டளையிட்டான்.

புதிய அரசன் தினமும் வேட்டையாடினான். தான் ஒரு சிறந்த வில் வீரன் என்று பெருமைப்பட்டான். மான்கள் நெடுந்தூரம் ஓடுவதற்கு வாய்ப்புக் கொடுத்த பிறகுதான்



அவன் அம்பு எறிவான். ஒவ்வொரு நாளும் ஒரே ஒரு மான் கிடைத்தால் போதும்; வேட்டையை நிறுத்திவிடுவான். ஆனால், அரசன் சோலைக்கு வந்ததுமே, மான்கள் பயத்திலே சிதறி ஓடும். அரசன் ஒரே ஒரு மானைப் பிடிக்கத்தான் வருவான். ஆனால், குழப்பத்தில் பல மான்கள் அடிபட்டு அவதிக்குள்ளாயின. இப்படிப் பல மான்கள் தினமும் துன்பப் படுவதைக் கண்ட ரோகந்தா, ஹீரானிடம் சொல்லியது:

"நண்பனே, நமது துரதிருஷ்டத்தைப் பார். நம்மிலே தினமும் ஒருவர் சாகவேண்டியிருக்கிறது! பிறந்த உயிர்கள் எல்லாமே ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும். நாம் காட்டிலே இருந்தபோதுகூட வேடர்களோ, ஆதிவாசிகளோ, குடியானவர்களோ, காட்டு மிருகங்களோ நமக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டுதான் வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்ப முடிந்ததா? இங்கு தினமும் ஒரு மான் வீதம் நாம் பறி கொடுக்கிறோம். ஆனாலும், பலர் வீணாக அடி படுவதும், அவதிப்படுவதும் பரிதாபமாக இருக்கிறதே!"

"உண்மைதான். இதற்கு நாம் என்ன செய்வது? தெரியவில்லையே." என்றது ஹீரான்.

"இதற்கு ஒரு வழி இருக்கிறது. நாம் தினமும் திருவுளச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம். எந்த மானுக்குச் சீட்டு விழுகிறதோ, அதுதான் அன்று அரசனின் வேட்டைக்குப் போகவேண்டும். ஒரு நாள் எனது கூட்டத்திலிருந்து, அடுத்த நாள் உனது கூட்டத்திலிருந்து — இப்படி மாறி மாறி நாம் மான்களை அனுப்புவோம். இந்த ஏற்பாட்டால், மற்ற மான்கள் அடிபடாமல் தப்பும்." என்று யோசனை கூறியது, ரோகந்தா. ஹீரான் உடனே இதற்கு இசைந்தது.

வேட்டையாடுவதில் அளவில்லாத ஆசை இருந்தாலும் ஒரு நாளுக்கு ஒரு மான் கிடைத்தாலே போதும் என்று அரசன் நினைத்தான். தினந்தோறும் பல மான்கள் வீணாக அடி படுவது அவனுக்கும் வருத்தமாகவே இருந்தது. எனவே அவனும் இந்தத் திட்டத்திற்குச் சம்மதித்தான். ஆனாலும், ஒன்று மட்டும் அவனுக்குப் பிடிக்கவில்லை. தினமும் ஒரு மான்



அவனிடம் வருவதும், உடனே அதை அவன் கொல்வதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் என்ன, கசாப்புக் கடைக்காரனு? அதற்காக அவன் ஓர் ஏற்பாடு செய்தான். சோலையைச் சுற்றி இருந்ததே வேலி, அதற்குச் சிறிது தள்ளி இன்னொரு வேலியை எழுப்பினுன். புதிய வேலிக்கும் பழைய வேலிக்கும் இடையில் வட்டமான ஒரு நல்ல பாதை அமைந்தது. சோலையிலிருந்து இந்தப் பாதைக்கு வருவதற்குப் பழைய வேலியில் ஒரு கதவு அமைத்தான். எந்த மானுக்கு முறையோ, அது அந்தக் கதவு வழியாகப் பாதைக்கு வரவேண்டும். அரசன் குதிரை மீது ஏறி அந்த இடத்தில் காத்திருப்பான். வேட்டை மான் பாதைக்கு வந்து, நன்ருக ஓடத் தொடங்கிய பிறகு, அரசன் அதை வேட்டை ஆடுவான். வேட்டை மான் அரசனிடம் அடிபடாமல் சோலையை ஒரு சுற்றுச் சுற்றி வந்துவிட்டால், அவன் அதை ஒன்றும் செய்யமாட்டான். மறுபடி அதற்கு எப்போது முறையோ அப்போது வந்தால் போதும். ஆனுல், அரசன் சிறந்த வில் வீரனுக இருந்ததால், இப்படி எந்த மானுமே தப்பியதில்லை. ஆகையால் எந்த மானுக்கு முறை வந்தாலும், அன்றுடன் அதன் ஆயுள் முடிந்தது என்பது அதற்குத் தெரியும். ஆனுலும், இது முன்னைவிட எவ்வளவோ மேல் ஆயிற்றே! முன்பு ஒரு மான் பிடிபடுவதற்குள் ஐந்தாறு மான்களுக்கு ஆபத்தான அடிபடும். அதற்கு இந்த ஏற்பாடு மேல் அல்லவா?

ஒரு நாள் ஒரு, பெண்மானின் முறை வந்தது. அப்போது அது கர்ப்பமாக இருந்தது. ''ஐயோ, இன்று நான் கொல்லப்பட்டால், என் வயிற்றில் இருக்கும் குட்டி பிறக்காதே! அது



வும் என்னுடன் இறந்துவிடுமே! இன்னும் கொஞ்ச நாள் நான் பிழைத்திருந்தாலும் போதும்; என் குட்டி பிறந்துவிடும். அப்புறம் சாவதைப்பற்றி நான் கவலைப்படவே மாட்டேன்” என்று நினைத்தது. அது ஹீரான் கூட்டத்தைச் சேர்ந்தது. அதனால், அது ஹீரானிடம் சென்றது. தன் முறையை இன்னும் சில நாள் தள்ளிவைத்துக்கொள்ளும்படி வேண்டியது.

ஹீரான் அதனுடைய துயரத்தை உணர்ந்தது. “உண்மைதான். ஆனாலும், உனக்குப் பதிலாக வேறு ஒருவரை எப்படி அனுப்புவது? எல்லாருக்குமே உயிர் மேல் ஆசைதான். எவ்வளவு காலம் வாழ முடியுமோ அவ்வளவு காலம் வாழ விரும்புகிறார்கள். உனக்குப் பதில் வேறு ஒருவரை அனுப்புவது சரியல்ல” என்று கூறிவிட்டது.

தலைவன் சொன்னது சரிதான் என்று அந்தப் பெண்மான் நினைத்தது. வேறு வழியில்லையே என்று ஏங்கியது. எதற்கும்



மற்ருெரு தலைவனுகிய ரோகந்தாவைக் கேட்டுப் பார்ப்போமே என்று எண்ணி அதனிடம் சென்று யோசனை கேட்டது.

''ஆமாம். ஹீரான் சொன்னது சரியே. உனக்குப் பதில் வேறு ஒருவரைப் போகச் சொல்வது நியாயமில்லைதான். ஆனுலும், நீ உன் குட்டி பிறக்கும் வரை, நீ வேட்டைமுறைக்குப் போகவேண்டாம்'' என்றது ரோகந்தா.

''அப்படியானுல், இன்று யார் போவது?'' என்று கேட்டது பெண்மான்.

''நான் எப்படியோ பார்த்துக்கொள்கிறேன். நீ கொஞ்சமும் கவலைப்படாதே.''

அன்று வேட்டைக்குப் போனபோது, வேட்டைப் பாதையில் இருந்த மானைக் கண்டு அரசன் வியப்படைந்தான். அங்கு இருந்தது வேறு யாருமல்ல; ரோகந்தாவேதான்!

''என்ன இது! உனக்கோ ஹீரானுக்கோ எவரும் தொந்



தரவு கொடுக்கக்கூடாது என்றுதான் நான் கட்டளையிட்டிருக்கின்றேனே! உன்னை ஏன் வேட்டை முறையில் வைத்துக் கொண்டாய்? என் கட்டளையை நானே மீறுவதா? போ, போ. வேறு ஒரு மானை அனுப்பு'' என்றான் அரசன்.

ரோகந்தா பெண்மானின் கதையைச் சொன்னது. ''நாதே, ஹீராதே இன்றைக்கு முறைவராத வேறொரு மானை இங்கே அனுப்பிவைப்பது கொஞ்சம்கூட நியாயமில்லை. அதனால்தான் நான் அப்படிச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக என்னையே நான் அர்ப்பணிக்கிறேன்'' என்றது.

இந்தப் பதிலைக் கேட்ட மன்னனின் மனம் இளகிவிட்டது. எதுவுமே பேசாமல் நெடு நேரம் நின்றான். பிறகு, ''இன்று வேட்டைகிடையாது. உன்னுடன் மீண்டும் பேசவேண்டும். மாலையில் சந்திப்போம்'' என்று கூறித் திரும்பிவிட்டான்.

மாலையில் சந்தித்தபோது, ''இன்று நான் உன்னையோ அல்லது அந்தப் பெண்மானையோ வேட்டையாடப் போவதில்லை'' என்றான் அரசன். ''ஏன் இப்படி முடிவு செய்தீர்கள்?'' என்று கேட்டது ரோகந்தா.

''ஏனா? அந்த அப்பாவிப் பெண்மானைக் கொல்வதா, அல்லது உன் போன்ற ஒரு தியாகியைக் கொல்வதா? இருவரில் எவரைக் கொன்றாலும் அது பெரும் பாவம்.''

''ஐயா, எங்கள் கூட்டத்தில் உள்ள எல்லா மான்களிடமும் இப்படி அன்பு செலுத்த மாட்டீர்களா? உங்கள் அன்பைப் பெற அவைகளுக்குத் தகுதி இல்லையா?''

அரசன் நீண்டநேரம் யோசனைசெய்தான். பிறகு, ஒரு பெரிய முடிவுக்கு வந்தான். ''இன்று முதல், நான் மான் வேட்டையாடுவதை விட்டுவிடுகிறேன். இனி, இந்தச் சோலை ஒரு பாதுகாப்பு வனமாகத் திகழும். காட்டிலும் சமவெளியிலும்கூட இனி எவரும் மான் வேட்டையாடமாட்டார்கள். குடியானவரின் பயிர்களை அழிக்கும் மான்களை மட்டுமே விரட்டுவோம்'' என்று அறிவித்தான்.

இவ்வாறுதான் பாதுகாப்பு வனங்கள் இந்தியா முழுவதும் முற்காலத்தில் தோன்றின. ஆண்டுகள் செல்லச் செல்ல மிருகங்களிடம் அன்பு செலுத்துவது என்னும் நமது பரம்பரைப் பண்பை மறந்தோம். இந்தியாவில் வேறு எந்த இனமும் கறுப்பு மானைப் போல் மனிதரின் கொடுமைக்கு ஆளானதில்லை. ஆனால், இப்போது இந்தத் தவற்றை உணர்ந்து, நம் இந்திய நாடு முழுவதும் கறுப்புக் கலைமானுக்குப் பாதுகாப்பு அளிக்கப் பெற்றுள்ளது.



குரங்கு மன்னன்

# நந்திரியா

## குரங்கு மன்னன் நந்திரியா

முன்னொரு காலத்தில் மத்திய இந்தியக் காட்டுப் பகுதியில் ஒரு குரங்குக் கூட்டம் வசித்துவந்தது. அங்கே ஒரு குட்டிக்குரங்கு பிறந்தது. நந்திரியா என்பது அதன் பெயர்.

இளமையிலே அதற்கு இரக்க குணம் இருந்தது. ஆனாலும், துணிச்சல் அதிகம். காடு முழுவதையும் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று அதற்கு ஆசை.

'பெரியவனாகி அநுபவம் பெறும்வரை கூட்டத்துடனே இருக்கவேண்டும். தனியே சுற்றக் கூடாது. மீறினால் ஆபத்து!' என்று அதன் பெற்றோர் எச்சரித்தார்கள்.

பெற்றோர் சொற்படி அது சில நாட்கள்தான் நடக்கும். பல நாட்கள், 'வீரதீரமாக விளங்கவேண்டும்' என்ற ஆசையில் கூட்டத்தை விட்டு விலகி மனம் போனபடி சுற்றும். ஆனாலும், இருட்டுவதற்குள் திரும்பிவந்துவிடும்.



இப்படித்தான் ஒரு முறை நந்திரியா மரத்துக்கு மரம் தாவி, குரங்குக் கூட்டம் வாழ்ந்த நடுக்காட்டிலிருந்து வெகு தூரம் சென்றது. காட்டின் எல்லைக்கே போய்விட்டது. அந்த எல்லையில் ஓர் ஓடை இருந்தது. ஓடையின் நடுவிலே ஒரு தீவு. அதிலே, ஏராளமான மாமரங்கள்! ஒவ்வொரு மரத்திலும் நிறையப் பழங்கள். பழுத்துக் குலுங்கும் அவற்றைக் கண்டதும் அதற்கு ஒரே ஆனந்தம்! அந்தத் தீவுக்குப் போக ஆசைப்பட்டது நந்திரியா. ஆனால், ஓடை அகலமாக இருந்தது. ஓடையில் நீரே இல்லாதிருந்தால்கூட, அதைப்



போன்ற வலுவான குட்டிக் குரங்கால், ஒரே மூச்சில் தாண்டி விடமுடியாது. அப்போது நல்ல மழை பெய்திருந்ததால், ஓடையில் ஒரே வெள்ளம்! அது ஆழமாயும் சுழல் நிறைந்தும் காணப்பட்டது.

ஏமாற்றத்துடன் நந்திரியா வீடு திரும்ப நினைத்தது. அப்போது, திடீரென்று அதன் பார்வையில் ஏதோ தென் பட்டது. கரைக்கும் தீவுக்கும் இடையே ஏதோ கறுப்பாக நீருக்கு மேல் தெரிந்தது. நன்ருக உற்றுப் பார்த்தது. அது ஒரு பெரிய பாறையின் மேல்புறம் என்பதை அறிந்து கொண்டது. ஓடைநீர் அதில் மோதி மோதிச் சுழன்றது. பால்போல் நுரை பொங்கி எழுந்தது. நீருக்கு மேல் பாறை சிறிதளவே தெரிந்தது. இருந்தாலும், அந்த இடம் போதும் என்று நந்திரியா நினைத்தது. 'ஒரே பாய்ச்சலில் அந்தப் பாறையை அடையலாம். அங்கிருந்து இன்னொரு பாய்ச்



போன்ற வலுவான குட்டிக் குரங்கால், ஒரே மூச்சில் தாண்டி விடமுடியாது. அப்போது நல்ல மழை பெய்திருந்ததால், ஓடையில் ஒரே வெள்ளம்! அது ஆழமாயும் சுழல் நிறைந்தும் காணப்பட்டது.

ஏமாற்றத்துடன் நந்திரியா வீடு திரும்ப நினைத்தது. அப்போது, திடீரென்று அதன் பார்வையில் ஏதோ தென் பட்டது. கரைக்கும் தீவுக்கும் இடையே ஏதோ கறுப்பாக நீருக்கு மேல் தெரிந்தது. நன்றாக உற்றுப் பார்த்தது. அது ஒரு பெரிய பாறையின் மேல்புறம் என்பதை அறிந்து கொண்டது. ஓடைநீர் அதில் மோதி மோதிச் சுழன்றது. பால்போல் நுரை பொங்கி எழுந்தது. நீருக்கு மேல் பாறை சிறிதளவே தெரிந்தது. இருந்தாலும், அந்த இடம் போதும் என்று நந்திரியா நினைத்தது. ‘ஒரே பாய்ச்சலில் அந்தப் பாறையை அடையலாம். அங்கிருந்து இன்னொரு பாய்ச்



பாறையின் மேல் நேராகக் குதிக்கவில்லை. சற்று முன்பே நீரில் விழுந்துவிட்டது. நல்ல காலம்; விரைந்து ஓடும் நீர் அதை அடித்துக்கொண்டு போவதற்கு முன்பே, அது தட்டுத் தடுமாறி நீந்தி, பாறையின் ஓரத்தைப் பிடித்துக்கொண்டு விட்டது. பிறகு, மெல்ல மெல்லப் பாறையின் மீது ஏறியது. அங்கேயே சிறிது நேரம் அமர்ந்து களைப்பாறியது. நீர் சில்லிட்டுப் போயிருந்ததால், அதன் உடல் முழுவதும் தெப்பமாக நனைந்திருந்தது.

'அப்பப்பா. இனிமேல் இப்படிப் பேராசையோடு தின்ன மாட்டேன். பசி தீரும் வரைதான் சாப்பிடுவேன்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டது.

மாலை வெய்யிலில் உடலில் இருந்த ஈரம் மறைந்தது. சீராக மூச்சுவிடவும் முடிந்தது. சிறிது நேரத்தில் அது பாறையி



லிருந்து ஒரே தாவலில் கரையை அடைந்தது. குரங்குக் கூட்டத்துடன் போய்ச் சேர்ந்துகொண்டது.

தீவிலே மிகவும் இனிப்பான மாம்பழங்கள் ஏராளமாக இருப்பதை நந்திரியா, தன் பெற்ருேரிடமும், கூட்டத்தி லிருந்த பிற குரங்குகளிடமும் உற்சாகமாகக் கூறியது.

'சிறு பிள்ளைகள் கற்பனை உலகில் வாழ்பவர்கள். ஆகை யால், எதையும் மிகைப்படுத்தியே கூறுவார்கள்' என்று பெரியவர்கள் நினைப்பதுண்டு. அந்தக் கூட்டத்திலிருந்த குரங்குகளும் நந்திரியா ஏதோ வேடிக்கையான சில பொய் களைக் கூறுவதாகவே நினைத்தன. 'வந்துதான் பாருங் களேன்' என்று நந்திரியா அவைகளை அழைத்தபோது,





"வேண்டாம். அந்த அற்புத மாம்பழங்களை நீ மட்டுமே தின்னப்பா" என்று கூறிவிட்டன.

அன்று முதல் நந்திரியாவும் அவை சொன்னபடியே செய்துவந்தது.

தீவை அது முதல் முதலாக அடைந்தபோது மழைக்காலத் தொடக்கம். பருவமழை அதிகமாக ஆக, ஓடையில் நீர் மட்டம் உயர்வதைக் கவனித்தது. நீர்மட்டம் உயர உயர, பாறை தெரியும் அளவும் குறைந்துகொண்டே வந்தது. 'இந்தப் பாறையைக் கவனமாகப் பார்த்தபடி இருக்கவேண்டும். ஒரு நாள் பாறை முழுவதும் நீருக்குள் மூழ்கிவிடும். அப்புறம் தீவுக்குப் போக முடியாது. பல வாரகாலம், அதாவது, வெள்ளம் வடிந்து மறுபடியும் நீருக்கு மேல் பாறை தெரியும் வரை காத்திருக்க வேண்டும்' என்பதை அது உணர்ந்தது.

ஓடையின் மேற்புறத்திலே, ஒரு திருப்பம் இருந்தது. அங்கே ஒரு ராட்சத முதலை வசித்துவந்தது. அது, இருந்த இடத்திலிருந்தே தினமும் நந்திரியா காலையில் ஓடையைத் தாண்டித் தீவுக்குச் செல்வதையும், மாலையில் மீண்டும் தாண்டி வீடு திரும்புவதையும் கவனித்துவந்தது. பேராசை பிடித்த முதலைக்குக் குரங்கு இறைச்சி என்றால் கொள்ளை ஆசை. 'எப்படியாவது இந்தக் குரங்கைப் பிடித்துத் தின்று விடவேண்டும்' என்று அது முடிவுசெய்தது. நந்திரியா அந்த முதலையை ஒரு நாள்கூடப் பார்த்ததில்லை. அது பார்க்க முடியாதபடி, முதலை தாழ்வான இடத்தில் ஒளிந்திருக்கும். குரங்கு தன்னைப் பார்த்துவிட்டால், பயந்துவிடும்; அப்புறம் அங்கு வராது என்பதுதான் முதலைக்குத் தெரியுமே!



ஓடையில் நீர்மட்டம் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருந்தது. ஒரு நாள் நந்திரியா கரைக்கு வந்தபோது, சீறிக்கொண்டிருந்த வெள்ளத்திற்கு மேலே பாறையின் ஒரு சிறு பகுதிதான் தென்பட்டது. தாவலாமா வேண்டாமா என்று நந்திரியா சற்றே தயங்கியது. 'எத்தனை முறை இங்கே தாவியிருக்கிறோம்? பயமென்ன? வெளியே இலேசாகத் தெரியும் பாறையின் மீது தாவிவிடலாம். பிறகு, அங்கிருந்து ஒரே பாய்ச்சல்தானே!' என்று துணிந்தது. அன்றுதான் கடைசி நாள் என்பதையும், அப்புறம் மழை ஓய்ந்து, வெள்ளம் வடியும் வரை அங்கே வரமுடியாது என்பதையும் உணர்ந்தது.

தீவுக்குத் தாவிச் சென்ற குரங்கு, இன்னும் பல நாட்கள் அல்லது பல வாரங்கள் அங்கு வரமுடியாதே என்ற நினைப்பில் அங்கேயே அதிக நேரம் தங்கிவிட்டது. நேரம் அதிகமாகி விட்டது என்பதை உணர்ந்ததும், அவசர அவசரமாகத் தீவிலிருந்து வழக்கமாகப் பாறைக்குத் தாவிச் செல்லும் இடத்திற்கு வந்தது. அப்போது சூரியன் மரங்களுக்குப் பின்னால் மறைந்து விட்டது. வழக்கமாக அது திரும்பும்போது, ஓடையிலே மாலை ஒளி இருக்கும். ஆனால், அப்போது நிழல் படிந்து மங்கலாக இருந்தது.



தாவப்போன குரங்கு திடீரென்று நின்றது. பாறையில் ஏதோ வேறுபாடு இருப்பதை அறிந்தது. காலையில் அதன் ஒரு சிறு பகுதி மட்டுமே நீருக்குமேல் தெரிந்தது. ஆனால், இப்போதோ அது பெரிதாகத் தெரிகிறதே! மழைக்காலத் துவக்கத்தில் இருந்தது போலக் காணப்படுகிறதே!

ஏதோ ஆபத்து என்பதை நந்திரியா உணர்ந்தது. அரை இருட்டிலே, தொலைவிலே அது பாறையைப் போலத்தான்



தெரிந்தது. ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் ஆற்று நீரின் அளவு குறைந்துவிடுமா? தீவின் கரையிலே நீர் மட்டம் குறைந்திருக்கிறதா என்று பார்த்தது. கொஞ்சம்கூடக் குறையவில்லை. ஆகவே, தன்னைப் பிடிக்க ஏதோ ஒரு பெரிய பிராணி சூழ்ச்சி செய்கிறது என்பதை நந்திரியா புரிந்து கொண்டது. உடனே அது ஒரு தந்திரம் செய்தது. பாறையைப் பார்த்துப் பேசுவது போல, "அண்ணே, இதோ நான் வந்து விட்டேன்" என்று கூவியது. ஆனால் ஒரு பதிலும் வரவில்லை. சோர்ந்த குரலில் மறுபடியும் கூவியது: "பாறையண்ணே, இன்று ஏன் என்னுடன் பேசாமல் இருக்கிறாய்?"

"ஓ! இந்தப் பாறை தினமும் குரங்குடன் பேசும் போலிருக்கிறது!" என்று நினைத்தது முதலை. 'பாறைக்குப் பதிலாக



நாமதான் பேசுவோமே' என்று தீர்மானித்து, "ஒன்று மில்லேப்பா, தூங்கிக்கொண்டிருந்தேன். அதனுல்தான் முதலில் நீ பேசியது காதில் விழவில்லே" என்றது உரத்த குரலில். பாறையைப் போல இருந்தது உண்மையிலேயே ஒரு பெரிய முதலேதான் என்பது இப்போது நந்திரியாவுக்குப் புரிந்தது. முதலே தன்னுடைய நீண்ட உடலில் பெரும் பகுதியை நீருக்குள் மறைத்துக்கொண்டு, தலேயையும் உடலின் ஒரு பகுதியையும் பாறை மீது வைத்திருந்தது. நந்திரியா உடனே, "நீ என் நண்பன் இல்லே. நீ ஒரு முதலே. உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டது.



முதலைக்கு ஒரே ஆத்திரம். தன் தந்திரம் வெளிப்பட்டு விட்டதே என்ற கோபத்துடன், ''என்ன வேண்டுமா! உன்னைத் தின்ன வேண்டும்.'' என்றது.

வேறு வழி யில்லாததால், நந்திரியா முதலையைத் தந்திரத் தாலேயே வெல்லத் தீர்மானித்தது. அது சொன்னது: ''முதலையே, எனக்குத் தப்ப வழியில்லை. ஆகையால், என்னையே உன்னிடம் தருகிறேன். நான் இப்போது தாவப் போகிறேன். உன் வாயை அகலத் திறந்து என்னைப் பிடித் துக்கொள். கண் ஜாக்கிரதை. ஒரு வேளை, நான் குறி தவறி, உன் வாய்க்குள் விழாமல், உன் தலைமேல் விழுந்துவிட்டால், உன் கண்களுக்கு ஆபத்து! ஆகையால், கண்களை இறுக மூடிக்கொள்.''

முட்டாள் முதலை அப்படியே வாயை அகலத் திறந்து, கண்களை இறுக மூடிக்கொண்டது. நந்திரியா முதலில் நடுங் கியது. பிறகு, தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, முதலை



யின் முதுகைக் குறிபார்த்துக் குதித்தது. அது குதித்த இடத்திற்கும், திறந்திருந்த முதலையின் வாய்க்கும் நல்ல இடைவெளி இருந்தது. அங்கிருந்து மறு பாய்ச்சலில், நந்திரியா எதிர் கரைக்குத் தாவி ஒரு மரத்தின்மீது பரபரவென்று ஏறியது. பிறகு, ''ஏ முட்டாள் முதலையே, இன்று நான் உனக்கு உணவாக விரும்பவில்லை. உன் வாலையே நீ கடித்துச் சாப்பிடு'' என்று கேலியாகக் கூறியது.

பல ஆண்டுகள் கழிந்தன. கூட்டத்தின் தலைமைக் குரங்கு இறந்துவிட்டது. துணிச்சலும், கெட்டிக்காரத்தனமும் நிறைந்த நந்திரியாவையே புதுத் தலைவராக மற்றக் குரங்குகள் தேர்ந்தெடுத்தன.

குரங்குக் கூட்டம் வாழ்ந்த இடத்தில் நிறையப் பழமரங்கள் இல்லை. எனவே, எல்லாரும் பழமரத் தீவுக்குப் போய்விடலாம் என்று நந்திரியா நினைத்தது. அப்படி ஒரு பழமரத் தீவு இருக்குமா என்று வயதான குரங்குகள் இன்னும் சந்தேகப்





பட்டுக்கொண்டே இருந்தன. ஆனால், இளம் குரங்குகளோ பழமரத் தீவுக்குப் போகவேண்டும் என்று ஆசைப்பட்டன.

தீவுக்குப் போவது என்று குரங்குக் கூட்டம் முடிவுசெய்த போது கோடைக் காலம் வந்துவிட்டது. அது ஒரு விதத்தில் வசதியாக இருந்தது. ஏனென்றால், நீரோடை பெரும்பாலும் வற்றிப் போய், பல பாறைகள் நீர் மட்டத்துக்கு மேல் தெரிந்தன. பாறைக்குப் பாறை தாவி, குட்டிகளும் கூட ஓடையை எளிதாகக் கடந்தன. தீவை அடைந்ததும், சந்தேகப்பட்ட முதிய குரங்குகள் கூட, அது ஓர் அற்புதமான இடம்தான் என்பதை ஒப்புக்கொண்டன.

ஆனால், பெரிய ஆபத்து ஒன்று அவைகளுக்கு வர இருந்தது!

கோடையில் வெப்பம் அதிகமாக ஆக, தொண்டை வரண்டது. தாகத்தைத் தீர்த்துக்கொள்ளக் குரங்குகள் அடிக்கடி நீரோடைக்கு வந்தன. ஆனால், நீரோடையும் வெகு சீக்கிரமாக வற்றிக் கொண்டிருந்தது. ஓரே தொடர்ச்சி யாக ஓடிக்கொண்டிருந்த ஓடைநீர், சிறு சிறு குட்டைகளாகத்



தேங்கி நின்றது. அவையும் விரைவில் சேறும் சகதியுமாகிப் பிறகு அடியோடு வரண்டு போயின. வழக்கமான இடத்தில் குடிநீர் கிடைக்காததால், குரங்குகள் கரையோரமாகச் சென்று எங்கேனும் நல்ல நீர் கிடைக்குமா என்று தேடிப் பார்த்தன. ஓடை வளைந்துசெல்லும் ஓரிடத்தில் கரை மிகச் சரிவாக இருந்தது. அங்கே ஒரு பெரிய குட்டை காணப் பட்டது. அதில் நிறையத் தண்ணீர் இருந்தது.

அதை முதலில் கண்டுபிடித்த குட்டிக் குரங்குகள் கும் மாளம் போட்டுக்கொண்டு அங்கே நீர் அருந்துவதற்கு ஓடின. அப்போது, திடீரென்று ஒரு குரங்கு, "நில்லுங்கள்" என்று



கூவியது. "என்ன காரணம்?" என்று மற்றவை விசாரித்தன. ஒன்றுமே சொல்லாமல், அந்தக் குரங்கு கரையோரம் சுட்டிக்காட்டியது. ஈரமாக, மிருதுவாக இருந்த அந்தத் தரையில், முயலும் பன்றியும் நடந்த அடையாளங்கள் தெரிந்தன. எல்லாமே குட்டையை நோக்கிச் சென்ற காலடிகள்! ஆனால், திரும்பிய சுவடு எதையுமே காணோம்! அங்கே ஏதோ ஆபத்து இருப்பதைக் குரங்குகள் அறிந்தன. உடனே, நந்திரியாவிடம் தெரிவிக்க முடிவுசெய்தன. நந்திரியா அங்கு வந்தது. காலடிகளைக் கவனித்தது. குட்டையை உற்றுப் பார்த்தது. குட்டையின் ஓரத்தில் கரும்பையும், மூங்கிலையும் போல உயர்ந்து வளர்ந்திருந்த நாணலின் நடுவே கூர்ந்து நோக்கியது. அங்கே, தன் பழைய எதிரியின் நீண்ட தலையையும் மூக்கையும் கண்டது. ஆம், அதே முதலைதான் அங்கு நாணல் நடுவே தந்திரமாக மறைந்து கொண்டிருந்தது.



தன்னைக் குரங்குகள் கண்டுபிடித்துவிட்டன என்பது முதலைக்குத் தெரிந்தது. இனியும் ஒளிவதில் பயனில்லை என்று அது வெளியே வந்து பேசியது: "குரங்குகளே, நீங்கள் எல்லாரும் எப்படியோ சாகப் போகிறீர்கள். இங்கு நீர் குடிக்க வரும் எல்லா மிருகங்களையும் நான் தின்றுவருகிறேன். அப்படியே உங்களையும் தின்னப் போகிறேன். இங்கே நீர் குடிக்க வராவிட்டாலும், நீங்கள் தாகத்தால் தவித்துச் சாகத் தான் போகிறீர்கள். இன்னும் இரண்டு மாதங்கள் — மழை



வரும்வரை — இந்தக் குட்டையை விட்டால் வேறு எங்குமே தண்ணீர் கிடையாது.''

என்ன செய்வது என்று தெரியாமல் நந்திரியா வெகு நேரம் யோசித்தது. இதற்குள் குரங்குகள் தொண்டை வரண்டு துடிதுடித்துக்கொண்டிருந்தன. திடீரென்று நந்திரி யாவுக்கு ஓர் அருமையான யோசனை தோன்றியது.

''எல்லாரும் முதலைக்கு எட்டாத தூரத்தில் கரையிலே தள்ளி நில்லுங்கள். ஒவ்வொருவரும் நீளமான ஒரு நாணலைப் பிடுங்கி வைத்துக்கொள்ளுங்கள்'' என்று கட்டளையிட்டது. அதுவும் ஒரு நாணலைப் பிடுங்கியது. அதன் மென்மையான மேல் பகுதியைக் கடித்து எறிந்துவிட்டு அதை வாயில் வைத்து ஊதியது. நடுவிலே ஒரு கணு இருந்ததால் அது சரியாக, ஊத வரவில்லை. வேறொரு நாணலைப் பிடுங்கியது. அதிலே கணு மிகவும் தள்ளி அடியிலே இருந்தது. அந்தக் கணுவை ஒடித்துவிட்டு ஊதிப் பார்த்தது. தடையில்லாமல் காற்று வெளியில் வந்தது. நந்திரியா முதலை ஒளிந்திருந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் சென்றது. நாணலின் நீளத்திற்குத்



தகுந்தபடி கரையிலே தள்ளி நின்றுகொண்டு, நாணலின் ஒரு முனையைக் குட்டைக்குள் விட்டது. மறு முனையை வாயில் வைத்து உறிஞ்சியது. தண்ணீர் மேலே வந்து, வரண்டிருந்த தொண்டைக்குள் சென்றது. நந்திரியாவின் தாகம் தீர்ந்தது. உடனே அது மற்றக் குரங்குகளையும், இதேபோல் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளச் சொல்லியது.

சில குட்டிக் குரங்குகள் முதலைக்கு அழகு காட்டின. கோபத்துடன் அவற்றைப் பிடிக்க நினைத்தது. ஆனாலும், அது தன் பருத்த உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு நகர்ந்து வருவதற்குள், குரங்குகள் நீரைக் குடித்துவிட்டு மரத்திலே ஏறிக்கொள்ளும். சிற்சில சமயங்களில், குரங்குகள் வைத்திருக்கும் நாணலை, முதலை கோபமாகக் கடித்து இழுக்கும். அதனால் என்ன? குரங்குகள் எதிர் கரைக்கு ஓடிப் போய்ப் புதிய நாணலை எடுத்து நீர் உறிஞ்சும். முட்டாள் முதலையோ குரங்குகளைப் பிடிக்கும் ஆத்திரத்தில் இப்படியும் அப்படியும் எழும்பிக் குதிக்கும். ஆனாலும், சிறிது நேரத்திலே களைத்துப் போகும். மரக்கட்டை போல் சாய்ந்தபடி கிடந்தவாறே குரங்குகளைக் கோபமாகப் பார்க்கும்.

இப்படி இரண்டு மாதங்கள் சென்றன. பிறகு மழைக் காலம் வந்துவிட்டது. ஓடையில் நீர் நிறைய வந்தது. கரையிலேயே குடிக்க நீர் கிடைத்தபிறகு, குரங்குகள் முதலைக் குட்டைக்கு ஏன் போகவேண்டும்?

பெரும்பாலான மாமரங்கள் தீவின் நடுவே - அதாவது ஓடைக்கரையிலிருந்து உள்பக்கம் தள்ளியே இருந்தன. ஓரே





ஒரு மரம் மட்டும் கரை ஓரமாக இருந்தது. எதிர்த் திசையைப் பார்த்துக்கொண்டிருந்தது. அதன் உச்சிக் கிளை ஒன்று மிக நீளமாக, எதிர்கரையைத் தொட்டுவிடும் அளவு வளர்ந் திருந்தது. அதில் இலையோ பழமோ இல்லை. அது ஒரு பட்டுப் போன கிளை. ஆனால், மற்றொரு கிளை அதற்குக் கீழே முளைத் திருந்தது. அதில் ஏராளமாக இலைகள் இருந்தன. பூக்கும் பருவத்தில் அது பூத்துக் குலுங்கியது.

இந்தக் கிளையில் பழங்கள் பழுத்தால், குரங்குக் கூட்டத் திற்கே ஆபத்து என்று நந்திரியாவுக்குத் தோன்றியது. ஏன்? பழுத்த பழங்களில் சில நீரிலே விழுந்து ஓடையில் மிதந்து போகலாம். ஓடை எங்கே போகிறதோ? ஏதேனும் ஒரு பெரிய ஆற்றிலே கலந்தால்...? ஆற்றங்கரையில் கிராமங்களும் நகரங் களும் இருக்கலாம். மாம்பழங்கள் மனிதர் கையிலே அகப் பட்டால் போதும்; எப்படியாவது அவர்கள் மாந்தோப்பைத் தேடிக் கண்டுபிடித்து விடுவார்கள். பிறகு குரங்குக் கூட்டத் தைத் துரத்தாமல் இருப்பார்களா?

ஆகையால், நந்திரியா, ''இந்தக் கிளையில் ஒரு சிறு பழம் பழுத்தாலும், அதை விட்டு வைக்கக்கூடாது. பறித்துத் தின்றுவிடவேண்டும்'' என்று மற்றக் குரங்குகளிடம் கூறியது. அவைகளும் அதன் சொற்படியே நடந்தன.

அந்தக் கிளையின் நுனிப் பக்கத்தில் ஒரு பெரிய எறும்புப்



புற்று இருந்தது. நன்ருகப் பெருத்துப் பழுத்த ஒரு மாம் பழத்தை அந்தப் புற்று மறைத்துக்கொண்டிருந்தது. எறும்பு களுக்குப் பயந்து எந்தக் குரங்கும் கிளை நுனி வரை போக வில்லை. ஆகையால், அங்கே ஒரு பழம் இருந்தது குரங்குகளின் கண்களுக்குத் தெரியாமலே போயிற்று.

அந்தப் பழம் நன்ருகப் பழுத்ததும் தாஞகத் தண்ணீரில் விழுந்தது. ஓடையில் மிதந்து சென்று ஓர் ஆற்றை அடைந் தது. ஆற்றங்கரையில் ஓர் அரண்மனை இருந்தது; அங்கு அரசன் குளிக்கும் குளத்திற்குள் ஆற்று நீரோடு மாம்பழமும் போய்ச் சேர்ந்தது.

அப்போதுதான் பறித்ததுபோல் இருந்தது அந்தப் பழம். அரசன் அதைத் தின்று பார்த்தான். இவ்வளவு சுவையான, இனிமையான பழத்தை அவன் அதுவரை தின்றதே இல்லை.

இத்தகைய அற்புதமான பழம் கிடைக்கும் தோப்பு எங்கே? அதை உடனே கண்டு பிடித்தாகவேண்டும் என்று துடித் தான் மன்னன்.



சில வில்வீரர்களை அழைத்துக்கொண்டு ஒரு படகில் ஏறிப் புறப்பட்டான். அவர்கள் ஆறு பாயும் திசைக்கு எதிர்த்திசையில் போனார்கள். நீரோடை ஆற்றுடன் கலக்கும் இடம் வந்ததும், அதன் கரைகளில் தேடிப் பார்த்தார்கள். கடைசியில் மாந்தோப்புத் தீவைக் கண்டுபிடித்து அங்கே போய்ச் சேர்ந்து விட்டார்கள்.

தீவில் எங்கு பார்த்தாலும் குரங்குகளாகவே இருப்பதைக் கண்டான் அரசன். அவற்றை உடனே அங்கு வேட்டையாடிக் கொல்ல நினைத்தான். ஆனால், அப்போது இருட்டிக் கொண்டிருந்தது. ஆகையால், அவன் தன் வில்வீரர்களைப் பார்த்து, ''நிறையப் பழங்கள் உள்ள மரங்களைப் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும். இன்று இரவு ஒரு பழம்கூடக் களவு போகக் கூடாது. நாளை விடிந்ததும் குரங்குகளை யெல்லாம் விரட்டி விடுவோம்'' என்றான்.

அரசன் பேசிக்கொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்தில் அடர்ந்து வளர்ந்திருந்தது ஒரு மரம். அதில் மறைந்திருந்த ஒரு சிறு குரங்கு இந்தப் பேச்சைக் கேட்டது. உடனே, சந்தடி செய்யாமல் மரத்துக்கு மரம் தாவி, தீவின் ஒரு கோடிக்குச் சென்றது. அங்குதான் நந்திரியா இரவிலே படுத்திருக்கும். நடந்ததை விவரமாக எடுத்துச் சொல்லி, ''என்ன செய்வது? நாளை நம்மை மொத்தமாக விரட்டிவிடுவார்களே! இந்த வேட்டையில் சிலர் காயமடையலாம்; சிலர் இறந்தும் போகலாம்'' என்று கவலைப்பட்டது.

நந்திரியா நீண்ட நேரம் தீவிரமாக யோசனை செய்தது. பிறகு, ''தப்பிக்க ஒரு வழி இருக்கிறது. எல்லாக் குரங்குகளுச்



கும் செய்தி அனுப்பு. இன்னும் ஒரு மணி நேரத்தில், மேற்குக் கரையிலே, பட்டுப்போன கிளையுள்ள மரம் இருக்கிறதே, அதன் அருகில், எல்லாரும் கூட வேண்டும்'' என்று கட்டளையிட்டது.

அப்போது மழைக்காலம். நீரோடையில் புதுவெள்ளம் குதித்து ஓடிக்கொண்டிருந்தது. குரங்குகள் முதல் முதலாக இந்தத் தீவுக்கு வரும்போது உதவியாக இருந்த பாறைகள் இப்போது நீரின் அடியிலே மூழ்கிக் கிடந்தன. ஆகையால், அந்த வழியாக — அதாவது கிழக்குக் கரை வழியாகத் தப்பிச் செல்ல முடியாது. எனவேதான் நந்திரியா மேற்குக் கரைக்குப் போயிற்று. அங்கு தனியாக நின்ற மரத்தின் மீது ஏறியது. அதன் பட்டுப் போன கிளையில் கவனமாக நடந்தது. அந்தக் கிளை எதிர்கரையை முக்கால் தூரம் எட்டியது. கிளையின் நுனிப்பகுதியை அடைந்த நந்திரியா மீதி உள்ள தூரம் எவ்வளவு என்று பார்த்தது. தன்னால் ஒரே தாவில் கடக்கக்கூடிய தூரம்தான் என்பதை அறிந்தது. அவ்வாறே தாவி, எதிர்க் கரையில் இருந்த ஒரு மரக் கிளையில் தொத்திக்கொண்டது.



தான் தாண்டிய தூரம் எவ்வளவு என்பதை உத்தேசமாகக் கணக்கிட்டது. அந்த அளவுக்கு ஒரு மூங்கிலைத் தேடி எடுத்தது. பருமன் இல்லாது போனாலும் உறுதியாக இருந்தது, அந்த மூங்கில். அங்கே கிடைத்த மூங்கிலில் நீளமானது அதுதான்! தான் இறங்கி வந்த அதே மரத்தில் அந்த மூங்கிலுடன் ஏறியது. மூங்கிலின் ஒரு முனையை ஓடைப் பக்கமாக நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு கிளையில் கெட்டியாகக் கட்டியது. பிறகு, வெகு ஜாக்கிரதையாக மூங்கிலில் தொத்தியது. மூங்கில் வழுவழுப்பாக இருந்ததால், அதில் தொத்துவது சிரமமாக இருந்தது. எப்படியோ சமாளித்து, மூங்கிலின் நுனியை அடைந்தது. மூங்கிலின் நுனிப் பாகத்தைத் தன் இடுப்பில் நன்றாகக் கட்டிக்கொண்டது. பிறகு, மூங்கிலை ஊஞ்சல்போல முன்னும் பின்னும் ஆட்டியது. ஓடும் நீருக்கு மேல் எதிர்க் கரையை நோக்கி மூங்கில் ஆடியது வேகம் அதிகமாக ஆக, மூங்கிலின் நுனி தீவுக்கரையிலிருந்த பட்டமரக் கிளையின் அருகே வந்தது. கரணம் தப்பினால் மரணம்தான். வேகமாக ஆடும் மூங்கிலிலிருந்து எந்தக் கணமும் நந்திரியா தவறிக் கீழே விழலாம். விழுந்தால் வேகமாக ஓடும் நீரில் மூழ்க வேண்டியதுதான். அந்த ஆபத்தைப் பொருட்படுத்தாமல், ஊஞ்சல் ஆடும் மூங்கில், பட்ட மரக்கிளைக்கு அருகே வந்ததும், சரேலென்று எட்டிப் பிடித்துக்கொண்டது



அதன் திட்டம் இதுதான். தன் இடுப்பில் இருந்த மூங்கில் நுனியைப் பட்ட மரக் கிளையில் கட்டிவிட்டால் போதும்; இக்கரைக்கும் அக்கரைக்கும் ஒரு மெல்லிய பாலம் அமைந்துவிடும். அது போதுமே! ஆனால், அது போட்ட திட்டத்தில் ஒரு தவறு ஏற்பட்டுவிட்டது. மரக்கிளையில் கட்டும் அளவுக்கு மூங்கில் நீளமாக இல்லை. ஒரு மீட்டர் குறைவாகப் போய்விட்டது! நந்திரியா இடுப்பிலிருந்து எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த உடல் பகுதி அந்த இடைவெளிக்குச் சரியாக இருந்தது. இடுப்புடன் சேர்த்துக் கட்டியிருக்கும் மூங்கிலை அவிழ்த்துவிட்டால், அதன் முனை மறுபடியும் எதிர் கரைக்குப் போய்விடும். அப்புறம் மீண்டும் அடியிலிருந்து வேலையைத் தொடங்கவேண்டும். என்ன செய்வது என்று யோசித்தது. அதே சமயம் தீவிலே பலமான கூச்சல் கேட்டது. வில் வீரர்கள் விடிவதற்குள் வேட்டையைத் தொடங்கி விட்டார்கள். இனி வேறு வழியில்லை. தன் உடலையே பாலத்தின் ஒரு பகுதியாகப் பயன்படுத்துவதுதான் வழி என்று தீர்மானித்தது!



கீழே கூடியிருந்த குரங்குகளை மெல்ல அழைத்தது. "ஒவ்வொருவராக மரத்திலே ஏறி, பாலத்தைக் கடந்து, எதிர் கரைக்குச் செல்லுங்கள்" என்றது. குரங்குகள் ஏராளமாக இருந்தன. அவை தன் மீது நடக்கும்போது நந்திரியாவுக்கு உடல் வலித்தது. சற்று நேரத்தில் வலி அதிகமாயிற்று. இப்போது அது என்ன, குட்டிக் குரங்கா? அதற்கும் வயதாகி விட்டதே! அதன் இதயமும் பலவீனமாக இருந்தது. திடீரென்று அதன் நெஞ்சுக்கு அருகிலே சுரீரென்று வலித்தது. இனி, ஒரே ஒரு குரங்கு தன் மீது நடந்தாலும் போதும்; இறந்து விடுவோம் என்று தோன்றியது. ஆனால், இன்னும் ஒரு தாய்க்குரங்கு மிச்சமிருந்தது. அது தனியாக இல்லை; தன் இரண்டு குட்டிகளுடன் இருந்தது! குட்டிகள் பயந்து நடுங்கிக்கொண்டிருந்தன. நந்திரியா தன் வலியை வெளியிலே காட்டிக்கொள்ளவில்லை. பல்லைக் கடித்துக்கொண்டு, அவற்றையும் அக்கரைக்கு விரைந்து போகச் சொன்னது.

தாய்க்குரங்கு குட்டிகளுடன் பத்திரமாக எதிர்கரையை அடைந்ததோ இல்லையோ, ஆபத்து வந்துவிட்டது. எதிர் கரையில் மரத்துடன் மூங்கிலைச் சேர்த்துக் கட்டியிருந்த முடிச்சு குரங்குகளின் கனத்தால் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்துகொண்டே வந்து, திடீரென்று அவிழ்ந்து விட்டது. இந்த அதிர்ச்சியில் ஏற்கெனவே களைத்துப் போயிருந்த நந்திரியாவின் பிடி தளர்ந்தது. தொப்பென்று அது தீவின் கரையிலே, தரையில் விழுந்தது.

இது நடப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்பே அங்கு யாருக்கும் தெரியாமல் அரசன் வந்திருந்தான். நடந்தவற்றையெல்லாம் அவன் பார்த்துக்கொண்டுதான் இருந்தான். மங்கிய நிலவொளியில், குரங்குகள் தீவை விட்டுப்போவதை அவன் திருப்தியாகப் பார்த்தான். அவன் விரும்பியதும் அதுதானே!

தொப்பென்று கீழே விழுந்த நந்திரியாவையும், அதன் இடுப்பிலே கட்டியிருந்த மூங்கிலையும் பார்த்த பிறகுதான் உண்மையில் என்ன நடந்தது என்பது அரசனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. உடனே கீழே விழுந்த நந்திரியாவை நோக்கி அவன் ஓடினான். அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முயன்றான். ஆனால், அப்போது அது இறக்கும் தறுவாயில் இருந்தது.

"ஆகா! என்னே உன் பெருந்தன்மை! மனிதர்களிலே கூட, பிறருக்காகத் தன்னையே தியாகம் செய்துகொண்டவரை நான் பார்த்ததுமில்லை; கேட்டதுமில்லை. உனக்கு ஏதேனும் கடைசி விருப்பம் இருந்தால் சொல்; அதை நிறைவேற்றுகிறேன்" என்றான்.



"என் கூட்டத்தார் மீது எனக்கு மிகுந்த அன்பு. அவர்களுக்குத் துன்பம் நேராமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று நந்திரியா மிகவும் தாழ்ந்த குரலில் கூறியது. அப்போதே அதன் ஆவி பிரிந்தது.

இந்தக் காட்சியால் அரசனின் மனம் இளகிவிட்டது. மாந்தோப்புத் தீவைத் தான் வைத்துக்கொள்ளாமல் குரங்குகளுக்கே திருப்பிக்கொடுத்துவிடுவது என்று முடிவுசெய்தான். பொழுது விடிந்ததும், தன் வீரர்களை அழைத்து, தீவுக்கும் எதிர் கரைக்கும் பலமான ஒரு மூங்கில் பாலம் கட்டச் செய்தான். எதிர்கரையிலிருந்த குரங்குகள் இதையெல்லாம் பார்த்துக்கொண்டே இருந்தன. அரசனின் நோக்கம் என்ன என்பது புரியாததால், அவை அந்தப் பாலத்தில் ஏறிச் செல்லவில்லை. ஆனால், தங்கள் தலைவன் நந்திரியாவுக்கு இறுதி மரியாதை செய்ய அரசன் ஏற்பாடு செய்வதைக் கண்டதும் தங்களைப் போலவே அரசனும் துக்கப்படுவதை அவை உணர்ந்தன. உடனே, எல்லாமாகப் பாலத்தைக் கடந்து சென்று நந்திரியாவுக்கு இறுதி மரியாதை செலுத்தின.

நந்திரியாவைப் புதைத்ததும், அந்தத் தீவிலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பினான் அரசன். அதன் அடிப்பாகத்தில் "இந்தத் தீவுக்குள் மனிதர் எவரும் நுழையக்கூடாது. இது குரங்குகளின் சரணலயம்" என்ற கட்டளையை ஒரு கல்லிலே செதுக்கி வைத்தான்.

அரண்மனைத் தோட்டத்தில் நட்டுவைக்க அரசன் சில மாம்பழங்களை மட்டும் தன்னுடன் எடுத்துச் சென்றான். அவை நன்கு வளரும்; இனிய பழங்கள் தரும். அப்பழங்கள், பெருந்தன்மை மிக்க நந்திரியாவின் தியாகத்தை அரசனுக்கு என்றென்றும் நினைவூட்டிக்கொண்டே இருக்கும் அல்லவா?



## இந்த வரிசைப் புத்தகங்கள்

| | |
|---|---|
| பாபு<br>*(மகாத்மா காந்தி வாழ்க்கை வரலாறு படங்களுடன், இரு பகுதிகள்)* | *எழுதியதும் படங்களும் : எப். சி. ப்ரிடெஸ்* |
| கஷ்மீர் | *போட்டோக்கள் : பி. என். சர்மா*<br>*எழுத்துரை : மாலா சிங்* |
| பறவை ஆராய்ச்சி | *ஜமால் ஆரா* |
| நம் நதிகள் | *லீலா மஜூம்தார்* |
| இமயச் சிகரங்களுக்கு இடையில் | *பிரிகேடியர் கியான் சிங்* |
| அவர்கள் கண்ட இந்தியா | *கே. சி. கன்ன* |
| நமது ரயில்வேக்கள் | *ஜகஜீத் சிங்* |
| சிரித்துச் சிந்திக்க சில கதைகள் | *மனோஜ் தாஸ்* |
| சொர்க்கலோக யாத்திரையும், மற்ற கதைகளும் | *லீலாவதி பகவத்* |
| சுயராஜ்யத்தின் கதை<br>*(இந்தி)* | *விஷ்ணு பிரபாகர்* |

*எல்லாப் புத்தகங்களும் எல்லா இந்திய மொழிகளிலும் கிடைக்கும்*

Printed at: Saraswati Art Printers, 8247/2, New Anaj Mandi, Delhi-110006


ரூ. 6.00
நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா